**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.110/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-6/PW- 5 | Village: | |
| Name | : அருள்செல்வம் | Age | :53 |
| Father's/Husband's Name | : சிதம்பரம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.12.2024**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**3ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1, 2, 4, 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருக்களப்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா3 சாந்திராணி எனது அக்கா ஆவார். அசா2 ரவிச்சந்திரன் எனது அக்காவின் கணவர் ஆவார். அசா1 சாந்தி எனது அக்காவின் மகள் ஆவார். சாட்சிகள் லோகசித்திரன், பாலுசாமி, அசோகன் ஆகியோர் எனது உறவினர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரி ராஜேஷ் மற்றும் எதிரிகள் பிரகாஷ், மல்லிகா, ரம்யா, வசந்தா ஆகியோரை எனக்கு

தெரியும். கடந்த 26.08.2013 ம் தேதி அசா1 சுவாதிக்கும் 1ம் எதிரி பிரகாஷ் என்பவருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கும்பகோணத்தில் உள்ள சங்கரா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது அசா1ன் பெற்றோர்களால் 50 பவுன் நகைகள், ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீர்பொருட்கள் கொடுக்கப்பட்டது. அசா1ன் மாமியார் ஆன 2 ம் எதிரி சீர் கொண்டுவரவில்லை என அசா1ஐ தொடர்ந்து கொடுமைப்படுத்தி வந்துள்ளார். 1ம் எதிரி பிரகாஷ் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததால் அசா1க்கும் 1ம் எதிரிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 1ம் எதிரி அசா1ஐ விட்டுவிட்டு 4 ம் எதிரியை அழைத்துகொண்டு அபுதாபி சென்றுவிட்டார். 1ம் எதிரிக்கு 4ம் எதிரி ரம்யா என்பவருடன் தொடர்பு ஏற்பட்டு 2021ம் ஆண்டு இருவருக்கும் பெண் குழந்தை பிறந்தது. அதன் பிறகு 1, 2 எதிரிகள் மற்றும் அவரது குடும்பத்தார்கள் ரம்யாவை விலக்கி வைக்க வேண்டும் என்றால் ஒரு பெரிய தொகை கொடுக்க வேண்டும் என்று எனது அக்கா குடும்பத்தாரிடம் ஒரு பெரிய தொகை கேட்டுள்ளார்கள். அசா1க்கும் அவரது குழந்தைக்கும் 1ம் எதிரி உணவுக்கோ மருத்துவத்துக்கோ எந்த உதவியும் செய்வதில்லை. 1ம் எதிரியே விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். நாங்கள் எவ்வளவோ பேசி பார்த்தும் எதிரிகள் கேட்கவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.18 17:45:36 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.110/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-5/PW- 4 | Village: |
| Name : பாலுசாமி | Age :65 |
| Father's/Husband's Name : தங்கராசு | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.12.2024**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**3ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1, 2, 4, 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது தென்னவநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா1 சுவாதி, அசா2 ரவிச்சந்திரன், அசா3 சாந்திராணி மற்றும் சாட்சி அசோகன் ஆகியோரை எனக்கு தெரியும். சாட்சி லோகசித்திரன் எனது தம்பி ஆவார். அவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரி ராஜேஷ் மற்றும் எதிரிகள் பிரகாஷ், மல்லிகா, ரம்யா, வசந்தா ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 2013ம் ஆண்டு 8ம் மாதம் அசா1 சுவாதிக்கும் 1ம்

எதிரி பிரகாஷ் என்பவருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கும்பகோணத்தில் உள்ள சங்கரா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது அசா1ன் பெற்றோர்களால் 50 பவுன் நகைகள், ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீர்பொருட்கள் கொடுக்கப்பட்டது. 1ம் எதிரி பிரகாஷ் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததால் அசா1க்கும் 1ம் எதிரிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இரு வீட்டாருக்கும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு சமாதானம் ஏற்படவில்லை. நானும் எனது தம்பி லோகசித்திரனும் ஒரு முறை எதிரிகளின் வீட்டிற்கு சமாதானம் பேச சென்றுள்ளோம். 1ம் எதிரி வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு குழந்தை பிறந்துவிட்டது. அது சம்மந்தமாக இரு தரப்பினருக்கும் வழக்குகள் நடைபெற்று வருகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.12.18 17:45:47 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.110/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-9/PW- 6 <br> Name : அசோகன் <br> Father's/Husband's Name : சிதம்பரம் <br> Nationality : Indian | Village: <br> Age :64 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.12.2024**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**3ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1, 2, 4, 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது வடலூரில் வசித்து வருகிறேன். நான்மாவட்ட நூலக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சொந்த கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறேன். அசா3 சாந்திராணி எனது தங்கை ஆவார். அசா2 ரவிச்சந்திரன் எனது தங்கையின் கணவர் ஆவார். அசா1 சாந்தி எனது தங்கையின் மகள் ஆவார். ஆஜர் எதிரி ராஜேஷ் மற்றும் எதிரிகள் பிரகாஷ், மல்லிகா, ரம்யா, வசந்தா ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த

26.08.2013 ம் தேதி அசா1 சுவாதிக்கும் 1ம் எதிரி பிரகாஷ் என்பவருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கும்பகோணத்தில் உள்ள திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது அசா1ன் பெற்றோர்களால் 50 பவுன் நகைகள், ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீர்பொருட்கள் மற்றும் 1 கார் கொடுக்கப்பட்டது. அதில் காரை மட்டும் திருப்பி கொடுத்துவிட்டார்கள். மற்ற பொருட்கள் எதிரிகளிடம் இருந்து வருகிறது. பிரகாஷ் அபுதாபியில் வேலை செய்து வந்தார். திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரி மற்றும் அசா1 அபுதாபி சென்று சுமார் 1 வருடம் அங்கிருந்தார்கள். அதன் பிறகு குழந்தையின் பிரசவத்திற்காக இருவரும் இந்தியாவிற்கு வந்தார்கள். குழந்தை பிறந்த பிறகு 1ம் எதிரி வெளிநாடு சென்றுவிட்டார். 1ம் எதிரியின் அம்மாவான 2ம் எதிரி மல்லிகா அசா1ஐ 1ம் எதிரியுடன் வெளிநாட்டிற்கு அழைத்து செல்ல மறுத்துவிட்டார். அதனால் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு நானும் சாட்சி லோகசந்திரன் என்பவரும் எதிரிகளின் வீட்டிற்கு சென்று சமாதானம் பேசி வந்தோம். 1ம் எதிரிக்கு 4ம் எதிரி ரம்யாவுடன் 2ம் எதிரியின் ஒப்புதலுடன் தொடர்பு இருந்துள்ளது. மேற்படி விவரம் குறித்து நானும் எனது சின்ன மைத்துனர் லோகசித்திரன் மற்றும் பாலுசாமி ஆகியோர் 4ம் எதிரியின் சித்தப்பாவிடம் சென்று கேட்டோம். அதனால் 4ம் எதிரி எங்களுக்கு இலவச சட்ட உதவி மையம் மூலமாக அறிவிப்பு அனுப்பினார். அதன் பிறகு அசா1ஐ சமாதானப்படுத்தி 1ம் எதிரி வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். பின்னர் 4ம் எதிரி ரம்யாவை ஒதுக்கி வைக்க வேண்டும் என்றால் ரூ.10 லட்சம் கொடுக்க வேண்டும் என்று 1, 2 எதிரிகள் அசா1டம் அவரது அப்பாவிடம் இருந்து ரூ.10 லட்சம் வாங்கி தருமாறு கேட்டுள்ளார்கள். அசா1 பணம் வாங்கி கொடுக்கவில்லை என்பதால் 21.12.2019 ம் தேதி இரவு எதிரிகள் பிரகாஷ், மல்லிகா, ராஜேஷ் ஆகியோர் அசா1 ஐ பேசி துன்புறுத்தியுள்ளார்கள். மறுநாள் காலை 4ம் எதிரி ரம்யா மற்றும் அவரது தாயார் 5ம் எதிரி வசந்தா ஆகியோர் அங்கு வந்து அசா1ஐ அசிங்கமாக திட்டி அடித்து வீட்டை விட்டு

வெளியே தள்ளிவிட்டார்கள். அதுகுறித்து அசா1 அவரது சித்தப்பா லோகசித்திரன் என்பவருக்கு போன் மூலமாக தகவல் சொல்லியுள்ளார். லோகசித்திரன் எனக்கு தகவல் சொன்னதின்பேரில் நானும் லோகசித்திரனும் 1ம் எதிரி வீட்டிற்கு சென்று அசா1ஐ அழைத்து வந்துவிட்டோம். அதன் பிறகு மதுரை உயர்நீதிமன்றத்தில் அசா1 மற்றும் 1ம் எதிரிக்கு கவுன்சிலிங் கொடுத்ததின்பேரில் இருவரும் சுமார் 6 மாதங்கள் அபுதாபியில் சேர்ந்து வாழ்ந்தனர். அதற்கு முன்பு இடைப்பட்ட காலத்தில் 1ம் எதிரி 4ம் எதிரியுடன் அபுதாபியில் சேர்ந்து வாழ்ந்ததால் 4ம் எதிரி கர்ப்பம் அடைந்துள்ளார். அவருக்கு 2022ம் ஆண்டு மே மாதம் குழந்தை பிறந்துள்ளது. குழந்தை பிறந்த பிறகுதான் எங்களுக்கு மேற்படி விவரம் தெரிய வந்தது. அசா1 கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.18 17:45:57 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**